RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

www.malaithanthi.in

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 101 | ஏப்ரல்.18 2026 சனிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# "இந்தத் தேர்தல் தமிழகத்தை சுரண்டும் குடும்பத்துக்கும், தமிழக மக்களுக்கும் இடையேயானது" இபிஎஸ்

சென்னை: ஏப்.18-

"தமிழகத்தை சுரண்டி பிழைக்கும் குடும்பத்துக்கும், தமிழக மக்களுக்கும் இடையிலான தேர்தல் இது" என அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

சேலம், சங்ககிரி சட்டப்பேரவைத் தொகுதியில் இபிஎஸ் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார். அப்போது பேசிய அவர், "இது, தமிழகத்தை சுரண்டி பிழைக்கும் குடும்பத்துக்கும், தமிழக மக்களுக்கும் இடையிலான தேர்தல். அதிமுக ஆட்சி அமைந்தவுடன் விசைத்தறி, கைத்தறி, விவசாயம் ஆகிய தொழிலகள் செழிக்கும். அதிமுகவுக்கு மக்கள் அமோக ஆதரவு அளித்து வருகின்றனர். அதிமுக கூட்டணி மிகவும் வலிமையான கூட்டணி. அதிமுக ஆட்சியில் விவசாயிகள் நலன் காக்கப்பட்டது, அதிமுக ஆட்சிக்கு வந்தவுடன் நெசவாளர்கள் நலன் காக்கப்படும்.



சாதிவாரி கணக்கெடுப்பு எடுக்க வேண்டும் என மத்திய அரசு தெரிவித்துள்ளது. அதன்படி தமிழகத்திலும் கணக்கெடுப்பு நடத்தப்படும். தற்போது ரேசன் கடைகளில் தரமில்லாத அரிசி வழங்கப்படுவதாக புகார் எழுந்துள்ளது. எங்கள் ஆட்சி அமைந்தவுடன் தரமான அரிசி வழங்கப்படும். திமுக ஆட்சியில் சட்டம் ஒழுங்கு சீர்கெட்டுவிட்டது.

கஞ்சா, போதைப் பொருள் விற்பனை அதிகரித்துள்ளது. நாடு அழிவுப் பாதையில் சென்று கொண்டுள்ளது. குழந்தைகள், சிறுமிகள், பெண்களுக்கு கூட பாதுகாப்பில்லை. என் மீது இருக்கின்ற கோபத்தால், நான் கொண்டுவந்த திட்டங்களையெல்லாம் முடக்கி இருக்கிறார்கள்.

அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக அம்மா மினி கிளினிக் திட்டத்தை முடக்கினார்கள். ஸ்டாலின் குடும்பம் மட்டும்தான் வளமாக உள்ளது. திமுகவினர் எந்த கடைக்குச் சென்று சாப்பிட்டாலும் பணம் தருவதில்லை.

அதிமுக ஜனநாயகம் மிகுந்த கட்சி. விலைவாசி கடுமையாக உயர்ந்து வருகிறது ஆனால் திமுக இது குறித்து யோசிப்பதில்லை. தற்போது மக்கள் வாழ முடியாத நிலை உள்ளது. திமுக கொடுத்த வாக்குறுதிகளில் நான்கில் ஒரு பங்கு கூட நிறைவேற்றவில்லை". இவ்வாறு அவர் பேசினார்.

## மகளிர் இட ஒதுக்கீடு மசோதா: அனைத்து எம்.பி.க்களிடமும் கடைசி நேர ஆதரவு கோரிய பிரதமர்

புதுடெல்லி: ஏப்.18-

மகளிர் இட ஒதுக்கீட்டு மசோதாவுக்கு ஆதரவு அளிக்குமாறு அனைத்து எம்.பிக்களுக்கும் கடைசி நேர வேண்டுகோளை முன்வைத்துள்ளார் பிரதமர் மோடி.



இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "மகளிர் இட ஒதுக்கீடு சட்டத்தை திருத்துவது குறித்த விவாதம் தற்போது நாடாளுமன்றத்தில் நடைபெற்று வருகிறது. நேற்றிரவு 1 மணி வரையில் இந்த விவாதம் தொடர்ந்து நடைபெற்றது. தவறான புரிதல்களை நீக்கும் வகையில் தர்க்க ரீதியிலான பதில்கள் வழங்கப்பட்டுள்ளன. எழுப்பப்பட்ட ஒவ்வொரு கேள்விக்கும் தெளிவான விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. தேவைப்பட்ட கூடுதல் தகவல்களும் அனைத்து உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன. எவருடைய மனதிலாவது எதிர்ப்பை ஏற்படுத்தக்கூடிய சிக்கல்கள் இருப்பின் அவையும் தீர்க்கப்பட்டுள்ளன.

நாட்டில் பெண்களுக்கான இட ஒதுக்கீடு விவகாரத்தைச் சுற்றி கடந்த 40 ஆண்டுகளாக பெருமளவிலான அரசியல் விளையாட்டுக்கள் அரங்கேறி வந்துள்ளன. நாட்டின் மக்கள் தொகையில் சரி பாதியாக உள்ள பெண்களுக்கு அவர்களுக்கான உரிமைகள் நிச்சயம் கிடைக்க வேண்டிய தருணம் இதுவே ஆகும்.

சுதந்திரம் பெற்று பல பத்தாண்டுகள் கடந்துவிட்ட பின்னரும்கூட முடிவெடுக்கும் செயல்முறைகளில் இந்தியப் பெண்களுக்கு மிகக் குறைந்த அளவிலேயே பிரதிநிதித்துவம் இருப்பது ஏற்புடையது அல்ல. இன்னும் சற்று நேரத்தில் மக்களவையில் வாக்கெடுப்பு நடைபெற உள்ளது. அனைத்து அரசியல் கட்சிகளையும் நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். நான் ஒரு வேண்டுகோளை முன்வைக்கிறேன். தயவு செய்து உரிய முறையில் ஆலோசித்து முழுமையான உணர்வுப்பூர்வமான அக்கறையுடன் ஒரு முடிவை எடுத்து பெண்களுக்கான இட ஒதுக்கீட்டுக்கு ஆதரவாக வாக்களியுங்கள்.

நாட்டின் பெண்கள் சக்தியின் சார்பாக அனைத்து உறுப்பினர்களிடமும் நான் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். தயவு செய்து பெண் சக்தியின் உணர்வுகளைப் புண்படுத்தக்கூடிய எதையும் செய்துவிடாதீர்கள். நாட்டின் கோடிக்கணக்கான பெண்களின் கண்கள் நம் அனைவர் மீதும், நமது நோக்கங்கள் மீதும், நமது முடிவுகள் மீதும் பதிந்துள்ளன. தயவு செய்தி மகளிர் இட ஒதுக்கீடு சட்டத் திருத்தத்துக்கு உங்கள் ஆதரவை அளியுங்கள்" என தெரிவித்துள்ளார்.

## "இது மகளிருக்கு அதிகாரம் அளிக்கும் மசோதா அல்ல; தேசத்தின் அரசியல் வரைபடத்தை மாற்றும் முயற்சி" ராகுல் காந்தி

புதுடெல்லி: ஏப்.18-

"மத்திய அரசு கொண்டுவந்துள்ள மகளிர் இட ஒதுக்கீடு மசோதா உண்மையில் மகளிருக்கு அதிகாரம் அளிக்கும் மசோதா அல்ல. மாறாக தேசத்தின் அரசியல் வரைபடத்தை மாற்றும் முயற்சி" என மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி குற்றஞ்சாட்டியுள்ளார்.

மேலும், "காஷ்மீரை போல் அனைத்து மாநிலங்களையும் பாஜக மாற்ற நினைக்கிறது. ஆனால் இந்த மசோதா ஒரு போதும் நிறைவேறாது. இதனால் தெற்கு மற்றும் வடகிழக்கு மாநிலங்கள் கவலை கொள்ளத் தேவையில்லை" என்றும் அவர் கூறியுள்ளார்.

தொகுதி மறுவரையறை தொடர்பான 3 மசோதாக்கள் மக்களவையில் நேற்று தாக்கல் செய்யப்பட்டன. இந்த மசோதாக்கள் மீதான விவாதம் நேற்று முதல் நடைபெற்று வருகிறது. இந்நிலையில், இன்று மக்களவையில் தொகுதி மறுவரையறை மசோதா தொடர்பான விவாதத்தின் போது மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி பேசினார்.

அப்போது அவர் பேசியதாவது: தற்போதைய மசோதா மகளிருக்கானது அல்ல; 2023ல் வந்ததே மகளிருக்கான மசோதா. இப்போது தாக்கல் செய்யப்பட்டுள்ள மசோதா தேச விரோதமானது. இது தேசத்தின் அரசியல் வரைபடத்தையே மாற்றும் முயற்சி. அதை மகளிர் மசோதா போர்வையில் செய்கிறார்கள். மத்திய அரசின் இந்தச் செய்ல வெட்கக்கேடானது.

பெண்களே நம் நாட்டின் மையப் புள்ளி. இந்த அவையில் உள்ள ஒவ்வொருவரும், தங்கள் வாழ்வில் தாயாக, சகோதரியாக, மனைவியாக உள்ள பெண்களிடமிருந்து ஏதாவது ஒன்றை கற்றுக் கொண்டிருப்பார்கள். நேற்று இந்த அவையில் எனது சகோதரி பிரியங்கா காந்தி பேசியதை எண்ணி நான் பெருமை கொள்கிறேன்.

இந்திய அரசியலில் தற்போது நிகழ்ந்து வரும் மாற்றங்களைக் கண்டு பாஜக பயப்படுகிறது. உண்மை என்பது பல நேரங்களில் இருளில் தான் மறைந்திருக்கிறது. "இருட்டைப் பார்த்து பயப்படக்கூடாது," என இந்திரா காந்தி கூறியிருக்கிறார். உண்மையைப் பற்றி பேசுவதில் எனக்கு எந்த பயமும் இல்லை.

தாங்கள் அடைய விரும்பும் இலக்குகளை நிறைவேற்றிக் கொள்ள, அரசியலமைப்புத் திருத்தம் ஒன்று தேவை என்பதை பாஜக நன்கு உணர்ந்துள்ளது. சாதிவாரி கணக்கெடுப்பை தவிர்த்து, பிற்படுத்தப்பட்டோர், பட்டியலின மக்களின் அதிகாரத்தைப் பறிப்பதே இந்த மசோதாவின் நோக்கம். இந்தியாவின் அதிகாரக் கட்டமைப்பில் ஓபிசி மற்றும் தலித்துகளுக்கு பாஜக எவ்வித இடமும் அளிப்பதில்லை

உங்கள் பலம் குறைவது கண்டு நீங்கள் நாட்டின் அரசியல் வரைபடத்தையே மாற்றத் துணிந்து விட்டீர்கள். முன்பு, அசாம் மற்றும் காஷ்மீரில் நீங்கள் இதைச் செய்தீர்கள். இப்போது அதைப்போலவே அனைத்து மாநிலங்களிலும் செய்ய நினைக்கிறீர்கள்.

ஆனால் இந்த மசோதா ஒரு போதும் நிறைவேறாது. இதனால் தென்னிந்திய மக்களும் வடகிழக்கு பிராந்திய மக்களும் கவலைப்பட வேண்டாம்." இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## "தொகுதி மறுவரையறை சட்டத் திருத்தத்தை மொத்தமாக திரும்பப் பெற வேண்டும்" ஸ்டாலின்

சென்னை: ஏப்.18-

தொகுதி மறுவரையறை சட்டத் திருத்தத்தை ஒன்றிய பாஜக அரசு மொத்தமாகத் திரும்பப் பெற வேண்டும் என்று முதல்வர் மு.க. ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக ஊடக பதிவில், "தமிழ்நாட்டின் அரசியலுக்கு மிக முக்கியமான நாள் இன்று. தொகுதி மறுவரையறைக்கு எதிரான நம் போராட்டங்களின் முடிவினை அறியப் போகும் நாள்.

நம்முடைய கடும் எதிர்ப்பினையும் போராட்டத்தினையும் தொடர்ந்து, தொகுதி மறுவரையறையால் தமிழ்நாட்டின் தொகுதி அளவு குறையாது என பிரதமரும் உள்துறை அமைச்சரும் நேற்று நாடாளுமன்றத்தில் வாய்மொழி உத்தரவாதம் அளித்துள்ளனர்.

ஆனால், சொல் ஒன்று ரூ செயல் வேறு என்பதாக, இவர்கள் தாக்கல் செய்துள்ள சட்டமுன்வடிவு முழுக்க முழுக்க ஏமாற்றுத் திட்டமாக இருக்கிறது.



இதை நம்பவும் முடியாது, ஏற்றுக்கொள்ளவும் முடியாது எனத் திட்டவட்டமாக நிராகரிக்கிறோம்.

இந்தச் சட்டமுன்வடிவில் தொகுதி மறுசீரமைப்பு ஆணையத்துக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மூலம், இவர்கள் நினைத்தால் நினைத்த நேரத்தில், நினைத்த முறையில், எப்போது வேண்டுமானாலும் எதிர்காலத்தில், இவர்களுக்கு சாதகமான வகையில், இந்திய மாநிலங்களின் தொகுதியளவை மாற்றியமைத்துக் கொள்வதற்கான வழிவகைகள் இந்தக் கருப்புச் சட்டத்தில் இடம்பெற்றுள்ளன. பெரும் சூழ்ச்சியை உள்ளடக்கியதாக இந்தச் சட்டமுன்வடிவு இருக்கிறது.

அவசரகதியில் இதனை நிறைவேற்றக் கூடாது. ஒன்றிய அரசு இதனை முழுவதுமாகத் திரும்பப் பெற வேண்டும். எண்ணிக்கை பலம் இருக்கிறது என்ற திமிரில், எங்களின் எதிர்ப்பை மீறி இதனை நிறைவேற்றினால், அதற்கான விளைவுகளைத் தமிழ்நாட்டில் நீங்கள் சந்திக்க வேண்டியிருக்கும். நேரு இந்தியைத் திணிக்க மாட்டோம் என்றார், இருந்தவரை அந்த உறுதிமொழியைக் காப்பாற்றினார்.

ஆனால், தற்போதைய ஒன்றிய ஆட்சியாளர்களோ மாநில உரிமைகளைக் காப்பாற்றுவோம் எனச் சொல்லிக்கொண்டே அதனைச் சில்லு சில்லாக நொறுக்கும் வேலையில் ஈடுபடுகின்றனர். நாம் கோருவது, முன்னாள் பிரதமர்கள் இந்திரா காந்தியும், வாஜ்பாயும் அரசியலமைப்புச் சட்டத்திலேயே திருத்தம் செய்து, 25 ஆண்டுகளுக்குத் தொகுதி மறுசீரமைப்பை நிறுத்தி வைத்ததைப் போன்ற சட்டப் பாதுகாப்பு.

தொகுதி மறுவரையறை மசோதாவை திரும்பப் பெறுங்கள். தமிழ்நாட்டின் குரலுக்கு ஒன்றிய பாஜக அரசு செவிசாய்த்தே ஆக வேண்டும்" என தெரிவித்துள்ளார்.

## சவால் விடும் பழனிவேல் தியாகராஜன் கடும் போட்டி கொடுக்கும் சுந்தர்.சி

மதுரை: ஏப்.18-

மதுரை மத்திய தொகுதியில் தொடர்ந்து இருமுறை சிரமமில்லாமல் வெற்றி பெற்ற திமுக வேட்பாளர் பழனிவேல் தியாகராஜனுக்கு, இந்த முறை அதிமுக கூட்டணி வேட்பாளர் சுந்தர்.சி தேர்தல் களத்தில் கடும் போட்டியை கொடுத்து வருகிறார்.

மதுரை மத்திய தொகுதியில் அதிமுக கூட்டணி சார்பில் புதிய நீதிக் கட்சி வேட்பாளராக சுந்தர்.சி அறிவிக்கப்பட்டு மதுரையில் வந்து இறங்கியதும், மீனாட்சி அம்மன் கோயிலுக்கு சென்று வழிபட்டுவிட்டு பிரச்சாரத்தை தொடங்கினார். அப்போது அவர், "நான் மதுரை மீனாட்சி அம்மன் கோயிலுக்குச் சென்றிருந்தேன். கோயில் பகுதியை பார்க்கும்போது எனக்கு ரொம்ப கஷ்டமாக இருந்தது.

எவ்வளவு பெரிய கட்டமைப்பு வசதிகளை கொண்டு வந்திருக்கலாம். ஆனால், ஆட்சியில் அதிகாரத்தில் இருந்தவர்கள் அதை பற்றியெல்லாம் கவலைப்பட்டதாக தெரியவில்லை. நான் 20 ஆண்டுகளுக்கு முன் வாராணசிக்கு சென்றுள்ளேன். அப்போது இருந்த வாராணசியையும், இப்போது மோடி வந்தபிறகு இருக்கும் வாராணசிக்கும் எவ்வளவு வித்தியாசம் உள்ளது'' என்று கூறி கொளுத்திப் போட்டார்.

மீனாட்சி அம்மன் கோயில் அறங்காவலர் குழுத் தலைவராக, பழனிவேல் தியாக ராஜனின் தாயார் ருக்மணி உள்ளார். மேலும், மீனாட்சி அம்மன் கோயில் அவரது மத்திய தொகுதிக்குள் வருகிறது. அதனால், அதிருப்தியடைந்த பழனிவேல் தியாகராஜன்,



''சுந்தர்.சியை சினிமா சங்கி, வெளியூரில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட வேட்பாளர், 11ம் வகுப்பு வரை மட்டுமே படித்தவர் என்பதால் அவருக்கு எதையும் புரிந்துகொள்ளும் அறிவு இல்லை, தொகுதி வரலாறு தெரியாதவர்" என்றெல்லாம் விமர்சித்தார்.

பின்னர் ''ஒவ்வொரு 500 அடிக்கும் ஒரு இடத்தில் என்னுடைய திட்டங்கள் உள்ளன, எழுதி வைத்துக் கொள்ளுங்கள், மே4ம் தேதி சுந்தர்.சி ஷூட்டிங் சென்று விடுவார்'' என சவால் விடுத்தார். பதிலுக்கு சுந்தர்.சியும், குஷ்புவும், பழனிவேல் தியாகராஜனை, ''தலைக்கணம் கொண்டவர், அவரது அதிகார திமிரால்தான் நிதி அமைச்சர் பதவியில் இருந்து பதவியிறக்கம் செய்யப்பட்டார், நாங்கள் படிக்காதவர்கள்தான், ஆனால் எங்கள் வளர்ப்பு சரியாக இருப்பதால் எங்கள் அப்பா, அம்மா பெயரை காப்பாற்றுகிறோம், நாங்கள் இறக்குமதி வேட்பாளர் என்றால், கனிமொழி, மு.க.ஸ்டாலின், அவர்கள் சொந்த தொகுதியிலா போட்டியிடுகிறார்கள்? அவர்களை பார்த்து இந்த கேள்வியை கேட்பாரா? தோல்வி பீதியில் தரமில்லாமல் பேசுகிறார்'' என்று விமர்சனம் செய்தனர்.

செய்தியாளர்கள் சந்திப்பு, பிரச்சாரத்தில் மட்டுமல்லாது, சமூக வலைதளங்களிலும் இரு தரப்பினரும் மோதிக் கொண்டனர். சுந்தர்.சிக்கு ஆதரவாக மு.க.அழகிரி ஆதரவாளர்கள் பி.எம்.மன்னன், எஸ்ஸார் கோபி தலைமையில் அதிமுகவினரும், பழனிவேல் தியாகராஜனுக்கு ஆதரவாக திமுக தலைமை அமைத்த தேர்தல் பணிக்குழுவினரும் தேர்தல் களத்தில் மும்முரமாக பணியாற்றி வருகின்றனர்.

தவெக வேட்பாளர் மதார் பதூருதீன், நாம் தமிழர் வேட்பாளர் அப்துல் ஹக்கீம் ஆகியோர் மத்திய தொகுதியில் சத்தமில்லாமல் தங்கள் பாணியில் பிரச்சாரம் செய்து வருகின்றனர். அவர்களும் இந்த தொகுதியில் கணிசமான வாக்குகளை பெற வாய்ப்புள்ளதாக தெரிகிறது. ஆனால், பழனிவேல் தியாகராஜனுக்கும், சுந்தர்.சிக்கும் இடையேதான் வெற்றிக்கான போட்டி உள்ளதாக கூறப்படுகிறது.

மத்திய தொகுதியை தவிர்த்த உதயநிதி பழனிவேல் தியாகராஜனுக்கு ஆதரவாக கனிமொழி, ப.சிதம்பரம், பழநெடுமாறன், தமிழச்சி தங்கபாண்டியன் போன்றோர் பிரச்சாரம் செய்துள்ளனர். சுந்தர்.சிக்கு ஆதரவாக பழனிசாமி, அண்ணாமலை, குஷ்பு, ஏ.சி.சண்முகம், காளியம்மாள் உள்ளிட்டோர் பிரச்சாரம் செய்துள்ளனர். மதுரை மாவட்டத்தில் நேற்று திமுக வேட்பாளர்கள் பி.மூர்த்தி, கோ. தளபதி, மணிமாறன், வெங்கடேசன் ஆகியோரை ஆதரித்து துணை முதல்வர் உதயநிதி பிரச்சாரம் செய்த நிலையில், அவர் மத்திய தொகுதிக்கு வராமல் புறக்கணித்து சென்றுள்ளார்.

முதல்வரின் மருமகன் சபரீசன், பழனிவேல் தியாகராஜனுக்காக மாநகர திமுக நிர்வாகிகளை தேர்தல் பணியில் முடுக்கிவிடும் நிலையில், உதயநிதி, பழனிவேல் தியாகராஜனுக்காக பிரச்சாரம் செய்யாமல் தவிர்த்தது பேசுபொருளாகியுள்ளது. இது குறித்து திமுகவினரிடம் கேட்டபோது, உதயநிதிக்கு போதுமான நேரம் இல்லாததால், குறிப்பிட்ட தொகுதிகளில் மட்டும் பிரச்சாரம் செய்து சென்றுள்ளார். மற்றபடி இதில் ஒன்றுமில்லை, என்றனர்.



■ குன்னூர் வெலிங்டன் கண்டோண்மென்ட் பகுதிக்கு உட்பட்ட ஜெயந்திநகர்பகுதியில் குன்னூர் சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் தவெக வேட்பாளர் தங்கராஜ் ஆதரித்து கண்டோன்மென்ட்பாரதியார் மற்றும் தவெக கட்சியினர் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டனர்



■ குன்னூர் வெலிங்டன் கண்டோண்மென்ட் பகுதிக்கு உட்பட்ட ஜெயந்திநகர்பகுதியில் குன்னூர் சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் திமுக வேட்பாளர் கே.எம் ராஜூ ஆதரித்து விடுதலை சிறுத்தை கட்சியினர் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டனர்

# உதகை பிரிக்ஸ் பள்ளியில் சட்டமன்ற தொகுதிக்கு பயன்படுத்தப்படும் வாக்குப்பதிவு இயந்திரங்களுக்கு வேட்பாளர்களின் பெயர் மற்றும் சின்னம் பொருத்தும் பணி



உதகை. ஏப்.18-

உதகை பிரிக்ஸ் பள்ளியில் சட்டமன்ற. தொகுதிக்கு பயன்படுத்தப்படும் வாக்குப்பதிவு இயந்திரங்களுக்கு வேட்பாளர்களின் பெயர் மற்றும் சின்னம் பொருத்தும் பணியினை மாவட்ட தேர்தல் அலுவலர் மாவட்ட ஆட்சித்தலைவர் நேரில் பார்வையிட்டு ஆய்வுநீலகிரி மாவட்டம், உதகை பிரிக்ஸ் ஆங்கிலோ இந்தியன் மெமோரியல் மேல்நிலைப்பள்ளியில், தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 யை முன்னிட்டு, 108 உதகமண்டலம் சட்டமன்ற தொகுதிக்கு பயன்படுத்தப்படும் வாக்குப்பதிவு இயந்திரங்களுக்கு வேட்பாளர்களின் பெயர் மற்றும் சின்னம் பொருத்தும் பணியினை, மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரமுகர்கள் முன்னிலையில் பார்வையிட்டார்.இந்திய தேர்தல் ஆணையம் எதிர்வரும் 23.04.2026 அன்று தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 வாக்குப்பதிவு நடைபெறுவதாகவும், தமிழ்நாட்டில் ஒரே கட்டமாக தேர்தல் நடத்தப்படுவதாகவும் அறிவித்ததை தொடர்ந்து, தேர்தல் தொடர்பான பணிகளும், வாக்களிப்பதன் அவசியம் குறித்து, நீலகிரி மாவட்டத்தில் உள்ள 108 உதகமண்டலம் சட்டமன்ற தொகுதி, 109 கூடலூர் சட்டமன்ற தொகுதி, 110 குன்னூர் சட்டமன்ற தொகுதியில் தொடர்ந்து பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகிறது. அந்த வகையில், எதிர்வரும் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 யை முன்னிட்டு உதகை, பிரிக்ஸ் ஆங்கிலோ இந்தியன் மெமோரியல் மேல்நிலைப்பள்ளியில் 108 உதகமண்டலம் சட்டமன்ற தொகுதிக்குரிய மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் வேட்பாளர்களின் பெயர் மற்றும் சின்னம் பொருத்தும் பணி நடைபெற்று வருவதை அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் முன்னிலையில் தேர்தல் நடத்தும் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.இதேபோல், 109 கூடலூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கூடலூர் புனித தாமஸ் பள்ளியிலும், 110 குன்னூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட குன்னூர் பிராவிடன்ஸ் மகளிர் கல்லூரியிலும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் வேட்பாளர்களின் பெயர் மற்றும் சின்னம் பொருத்தும் பணிகள் நடைபெற்று வருகிறது. ண இந்நிகழ்வில் தேர்தல் நடத்தும் அலுவலர் / உதகை வருவாய் கோட்டாட்சியர் டினு அரவிந்த், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரமுகர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.



# ஜோலார்பேட்டை கிழக்கு ஒன்றியத்தில் ஜோலார்பேட்டை சட்டமன்ற தொகுதி வேட்பாளர் தீவிர வாக்கு சேகரிப்பு

திருப்பத்தூர் : ஏப். 18-

திருப்பத்தூர் மாவட்டம்ஜோலார்பேட்டை சட்டமன்ற தொகுதியின் வேட்பாளர் கவிதா தண்டபாணியை ஆதரித்து ஜோலார்பேட்டை கிழக்கு ஒன்றிய செயலாளர் உமா கண்ரங்கம் தலைமையில் ஜோலார்பேட்டை சட்டமன்ற தொகுதி, ஜோலார்பேட்டை கிழக்கு ஒன்றிய ஊராட்சிக்கு உட்பட்ட நெக்குந்தி மோதகோட்டை, நாயுடு வட்டம், சிகர்ணபள்ளி, காமராஜ் நகர், நியூ சிகர்ணபள்ளி, புத்துக்கோவில், பெத்தகல்லுப்பள்ளி, கூத்தாண்ட குப்பம், கேத்தாண்டப்பட்டி, சின்னூர் வட்டம், சர்க்கரை ஆலை, உள்ளிட்ட பகுதிகளில் தீவிர வாக்கு சேகரித்து சிறப்புரையாற்றினார். உடன் ஒன்றிய கவுன்சிலர் ஜனனி மோகன்ராஜ், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளரும் ஒன்றிய கவுன்சிலர் செந்தில் குமார், கூட்டணி கட்சி நிர்வாகிகள் தேமுதிக மாவட்ட பொருளாளர் ஆஞ்சி, விடுதலை சிறுத்தைகட்சியின் நிர்வாகிகள், ஒன்றியஅவை தலைவர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், கவுன்சிலர்கள், கிளைக் கழக நிர்வாகிகள், பொதுமக்கள் என அனைவரும் கலந்து கொண்டு வாக்கு சேகரித்து வருகின்றனர்.



# தாம்பரம் மாநகர விளையாட்டு அணி சார்பில் தாம்பரம் தொகுதி வேட்பாளர் ஆர் எஸ் கிருத்திகா தேவிக்கு மிக சிறப்பாக வரவேற்பு அளிக்கப்பட்டது

தாம்பரம் ஏப். 18-

செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் மாநகராட்சி, பெருங்களத்தூர் வடக்கு பகுதியில், திமுக வேட்பாளர் டாக்டர் ஆர்.எஸ். கிருத்திகாதேவி அவர்கள், எஸ்.ஆர். ராஜா எம்எல்ஏ அவர்களுடன் இணைந்து, உதயசூரியன் சின்னத்திற்காக திறந்த வெளி வாகனத்தில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.அப்போது, பகுதி விளையாட்டு அணி அமைப்பாளர் ப. விஜய், பகுதி விளையாட்டு அணி துணை அமைப்பாளர்கள் மூர்த்தி, கிஷோர் குமார், சந்தோஷ், பகுதி சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் மு. ரவிக்குமார், வட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் சின்னராசு, பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் ஏ. கார்த்திக் மற்றும் கழக நிர்வாகிகள் ரோஷன், ரோகன், குட்டி, இளையராஜா, மகேஷ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

லோகநாதன் தெரு மற்றும் சிவானந்தம் தெரு வாசிகள் வேட்பாளருக்கு உற்சாகமான வரவேற்பு அளித்தனர்.வேட்பாளருக்கு செங்கோல் வழங்கி, மாலை அணிவித்து, பட்டாசுகள் வெடித்து மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.இந்த நிகழ்வில் தாம்பரம் மாநகராட்சி மேயர் வசந்தகுமாரி, பெருங்களத்தூர் வடக்கு பகுதி செயலாளர் டி. காமராஜ் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு, திமுக வேட்பாளருக்கு ஆதரவு தெரிவித்தனர்.

# காதல் கொலைகளை தடுக்க சிறப்பு சட்டம் நிறைவேற்ற அரசுக்கு உத்தரவிட முடியாது

## ஐகோர்ட் உத்தரவு

மதுரை, ஏப்.18-

'காதல் விவகார படுகொலைகளை தடுக்க சிறப்புச் சட்டம் நிறைவேற்ற அரசுக்கு உத்தரவிட முடியாது' என உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

தூத்துக்குடியைச் சேர்ந்த பொன் காந்திமதிநாதன் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனுவில், ''நெல்லையில் மென்பொருள் பொறியாளர் கவின், காதல் விவகாரத்தில் படுகொலை செய்யப்பட்டார்.

தமிழகத்தில் காதல் விவகார கொலைகள் அதிகளவில் நடைபெற்று வருகின்றன. இதைத் தடுக்க தனிச் சட்டம் இல்லை. எனவே காதல் விவகார கொலைகளை தடுக்க சிறப்புச் சட்டம் நிறைவேற்ற அரசுக்கு உத்தரவிட வேண்டும்'' என கோரியிருந்தார்.

இந்த மனு நீதிபதிகள் சுரேஷ்குமார், வடமலை அமர்வில் விசாரணைக்கு வந்தது. அரசு தரப்பில், ''நெல்லை கவின் கொலை வழக்கு சிபிசிஐடிக்கு மாற்றப்பட்டு நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. விசாரணை நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருக்கிறது.

கவின் குடும்பத்துக்கு வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் உரிய இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது. காதல் விவகார கொலைகளை தடுக்க சிறப்புச் சட்டம் நிறைவேற்றுவது தொடர்பாக ஓய்வுபெற்ற நீதிபதி தலைமையில் ஆய்வுக்குழு அமைக்கப்பட்டு அறிக்கை பெறப்பட்டுள்ளது'' என கூறப்பட்டது.

இதையடுத்து, ''சிறப்புச் சட்டம் இயற்ற அரசுக்கு நீதிமன்றம் உத்தரவிட முடியாது. மனுமுடித்து வைக்கப்படுகிறது'' என நீதிபதிகள் உத்தரவிட்டனர்.



# சட்டம்ஒழுங்கு மாநிலம் முழுவதும் சீர்கேடு:போதை பொருட்களை கட்டுப்படுத்த தி.மு.க. அரசு தவறி விட்டது

## வேப்பனப்பள்ளி தொகுதி அ.தி.மு.க. வேட்பாளர் கே.பி.முனுசாமி பிரசாரம்

கிருஷ்ணகிரி, ஏப்.18-

வேப்பனப்பள்ளி தொகுதி அ.தி.மு.க. வேட்பாளர் கே.பி. முனுசாமி எம்.எல்.ஏ. தீவிர தேர்தல் பிரசாரம் மேற்கொண்டு வருகிறார். அவர் நேற்று நாரலப்பள்ளி, எம்.சி.பள்ளி, பெரியகோட்டப்பள்ளி, கல்லகுறி ஊராட்சிகளுக்கு உட்பட்ட 20க்கும். மேற்பட்ட கிராமங்களுக்கு சென்று வாக்கு சேகரித்தார். அப்போது அவர் பேசியதாவது: தமிழகத்தை பொறுத் தவரையில் இது முக்கியமானதேர்தல். கடந்த 5 ஆண்டு கால தி.மு.க. ஆட்சியில் தமிழகத் தில் வளர்ச்சிக்கு அக்கறை காட்டவில்லை. குறிப்பாக நமது கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 5 ஆண்டுகளில் என்ன செய்தார்கள் என்று பார்த்1. தால் ஒன்றுமே இல்லை. இந்த மாவட்த்தில் நடந்த எம்.ஜி. டந்த எம்.ஜி. ஆர். நூற்றாண்டு விழாவில் ஓசூர், வேப்பனப்பள்ளி தொகுதிகளில் உள்ள ஏரிகளுக்கு தண்ணீர் நிரப்பும் திட் டம் அறிவித்தார். இதில் அழி யாளம் திட்டம், எண்ணேகொள் திட்டம் பணிகள் நடந்து வருகிறது. இந்த தொகு திக்கு நீர் ஆதார திட்டங்கள் செயல்படுத்துவது குறித்து நான் சட்டசபையில் பேசி னேன். எதிர்க்கட்சி தலைவர்" எடப்பாடி பழனிசாமியும பேசினார்.

எடப்பாடி பழனிசாமி ஆட்சி காலத்தில் ரூ.348கோடி யில் அரசு மருத்துவ கல்லூரி இந்தமாவட்டத்திலகொண்டு வரப்பட்டது. தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர்கெட்டு உள்ளது. போதை பொருட்கள் சாதாரணமாக கிடைக்கிறது. அதை கட்டுப்படுத்த தி.மு.க. அரசு தவறி விட்டது. இந்த ஆட்சியை அகற்றவேண் டும். எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா வழியில் ஆட்சி நடத்திய எடப் பாடி பழனிசாமியின் ஆட்சி மீண்டும் அமைந்திட வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

# தேனி மாவட்டத்தில் வாக்குப்பதிவு இயந்திரங்களில் சின்னம் பொருத்தும் பணிகள் நடைபெற்று வருவதை மாவட்ட தேர்தல் அலுவலர் நேரில் பார்வையிட்டு ஆய்வு





தேனி ஏப்.18-

தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு தேனி மாவட்டம், ஆண்டிபட்டி வட்டாட்சியர் அலுவலகத்தில் உள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் வண்ணப் புகைப்படத்துடன் கூடிய வேட்பாளர்கள் பெயர் பட்டியல் மற்றும் சின்னம் பொருத்தும் பணிகள் நடைபெற்று வருவதை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத்சிங், நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026 ஐ முன்னிட்டு தேனி மாவட்டத்தில் உள்ள 198.ஆண்டிபட்டி, 199. பெரியகுளம் (தனி), 200.போடிநாயக்கனூர் மற்றும் 201.கம்பம் ஆகிய 4 சட்டமன்றத் தொகுதிகளுக்கு வருகின்ற 23.04.2026 அன்று தேர்தல் நடைபெற உள்ளது. மாவட்ட நிர்வாகத்தின் மூலம் தேர்தல் வாக்குப்பதிவிற்கான முன்னேற்பாடு பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்திய தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதலின்படி, ஆண்டிபட்டி, பெரியகுளம், போடிநாயக்கனூர், உத்தமபாளையம் வட்டாட்சியர் அலுவலகங்களில் பாதுகாப்பு வைப்பறையில் வைக்கப்பட்டுள்ள வாக்குப்பதிவு இயந்திரங்கள் இன்று காவல் பாதுகாப்புடன் வேட்பாளர் மற்றும் வேட்பாளர்களின் முகவர்களின் முன்னிலையில் எடுக்கப்பட்டு, வாக்குப்பதிவு இயந்திரங்களில் சின்னம் பொருத்தும் பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும், ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் வட்டாட்சியர்கள், மண்டல அலுவலர்கள், துணை வட்டாட்சியர்கள், வருவாய் ஆய்வாளர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள் மூலம் புகைப்படத்துடன் கூடிய வேட்பாளர்கள் பெயர் பட்டியல் மற்றும் சின்னம் பொருத்தும் (ஙிணீறீறீஷீமீ ஷிலீமீமீ) பணிகள் நிறைவுற்று, வரைவு சோதனை மேற்கொண்டு மீண்டும் பாதுகாப்பு அறையில் வைக்கப்படும்.

அதனடிப்படையில், இன்று ஆண்டிபட்டி வட்டாட்சியர் அலுவலகத்தில் இந்திய தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதலின்படி வண்ணப் புகைப்படத்துடன் கூடிய வேட்பாளர்கள் பெயர் பட்டியல் மற்றும் சின்னம் பொருத்தும் (ஙிணீறீறீஷீமீ ஷிலீமீமீ) பணிகள் நடைபெற்று வருவதை மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்டஆட்சித்தலைவர் அவர்கள் நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்கள்.

முன்னதாக, கொடுவிலார்பட்டி தேனி கம்மவார் சங்கம் கல்லூரியில் 4 சட்டமன்றத் தொகுதிகளுக்கான வாக்கு எண்ணும் மையத்தில் தபால்வாக்கு எண்ணும் அறைகள், வாக்குப்பதிவு இயந்திரங்கள் தனித்தனியாக வைப்பதற்கான பாதுகாப்பு வைப்பறைகள், வாக்கு எண்ணுவதற்கான அறைகள், கட்டுப்பாட்டு அறைகள் மற்றும் அடிப்படை வசதிகள் இந்திய தேர்தல் ஆணையத்தால் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகள் பின்பற்றப்பட்டுபணிகள் நடைபெற்று வருவதை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத்சிங், மாவட்ட காவல் கண்கணிப்பாளர் மரு.சினேஹாப்ரியா முன்னிலையில் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இவ்வாய்வுகளில், மாவட்ட வருவாய் அலுவலர்.ப.ராஜகுமார், தேர்தல் நடத்தும் அலுவலர் / தனித்துணை ஆட்சியர் கவிதா, துணை காவல் கண்காணிப்பாளர்கள் .தேவராஜ், சீதாலெட்சுமி, மனீஷா, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் ஏ.எடிசன், வட்டாட்சியர்கள் சுருளி (தேர்தல்), ஜாஹிர் உசேன் (ஆண்டிபட்டி), சதீஸ்குமார் (தேனி) மற்றும் உதவி செயற்பொறியாளர்கள் சரவணக்குமார், .சண்முகவேல் உள்ளிட்ட அலுவலர்கள் பலர் இருந்தனர்.




# புழல் ஒன்றியம் அழிஞ்சிவாக்கம் ஊராட்சியில் பிரம்மாண்டமான வரவேற்பு

மாதவரம், ஏப்.18-
மாதவரம் சட்டமன்ற தொகுதி மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி திமுக வேட்பாளரும் சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளருமான எஸ்.சுதர்சனத்திற்கு புழல் ஒன்றிய பொறுப்பாளர் அற்புதராஜ் தலைமையில் அழிஞ்சிவாக்கம் ஊராட்சியில் உள்ள வாக்காளர்களிடம் உதயசூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரித்தனர். அப்போது முன்னாள் அழிஞ்சிவாக்கம் ஊராட்சி மன்ற தலைவர் ஆஷாகல்விநாதன், முன்னாள் கவுன்சிலர் சிவகுமார், அவைத்தலைவர் செல்வமணி, மாவட்ட வர்த்தகஅணி துணை அமைப்பாளர் கல்விநாதன், மாவட்ட நெசவாளர் அணி துணை அமைப்பாளர் முரளி, ஆதிதிராவிடர் கிளை அமைப்பாளர் தினேஷ், நெசவாளர் அணி நிர்வாகி சங்கர் மற்றும் நிர்வாகிகள் அஜித், ராஜ் குமார், நாகராஜ், ராஜா, சசி, ரவி, சுப்பிரமணி, சதீஷ்குமார், ஐயப்பன், பாலசுப்பிரமணி, தரணி உள்ளிட்ட மகளிர்கள், இளைஞர்கள் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி பொறுப்பாளர்கள் திரளாக கலந்துகொண்டு பட்டாசு வெடித்து வேட்ப்பாளருக்கு பொன்னாடை போர்த்தி மாலை அணிவித்து ஆர்த்தி எடுத்து பிரம்மாண்டமாக வரவேற்ப்பு அளித்தனர்.



# தீர்த்தக்கிரியம்பட்டு ஊராட்சியில் பொதுமக்களுக்கு அறுசுவை பிரியாணி வழங்கல்

மாதவரம், ஏப்.18-
மாதவரம், தொகுதி புழல் ஒன்றியம் தீர்த்தக்கிரியம்பட்டு ஊராட்சியில் டாக்டர் அம்பேத்கர் 135வது பிறந்த நாளை முன்னிட்டு புரட்சிபாரதம் கட்சி சார்பில் பொதுமக்களுக்கு அறுசுவை பிரியாணி உணவு வழங்கும் நிகழ்ச்சி புழல் ஒன்றிய செயலாளர் வழக்கறிஞர் ஆர்.கிருஷ்ணகுமார் தலைமையில் மாவட்ட வழக்கறிஞர் செயலாளர் வழக்கறிஞர் ஆர்.சிரஞ்சீவி ஏற்பாட்டில் நடைபெற்றது.நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக மாவட்ட செயலாளர் கே.என்.எம்.குமார் கலந்துகொண்டு டாக்டர் அம்பேத்கரில் திருஉருவ படத்திற்கு மலர்மாலை அணிவித்து மலர்கள் தூவி மரியாதை செலுத்தினர்.தூத்துக்குடி முருகேசன், ஆட்டோ முருகன், கெஜா, மதன், சுரேஷ், இளங்கோவன், பிரபாகரன் ஆகியோர் நிகழ்ச்சினை துவக்கி வைத்தனர். பின்னர் சுமார் 500க்கு மேற்பட்ட பொதுமக்களுக்கு அறுசுவை பிரியாணி உணவு வழங்கப்பட்டது.இதில் மணிகண்டன், பிரதிஷ்வரன், வேலு, விச்சு, வினோத், காண்ராஜ், கார்த்திக் உள்ளிட்ட புரட்சிபாரதம் கட்சி நிர்வாகிகள், பொறுப்பாளர்கள் திரளாக கலந்துகொண்டனர்.



# புள்ளிலைன் ஊராட்சியில் திமுக வேட்பாளர் எஸ்.சுதர்சனத்திற்கு பிரம்மாண்ட வரவேற்பு

மாதவரம், ஏப்.18-
திருவள்ளூர் மாவட்டம் மாதவரம் சட்டமன்ற தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி திமுக வேட்பாளரும் சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளருமான மாதவரம் எஸ்.சுதர்சனத்திற்கு புழல் ஒன்றிய திமுக பொறுப்பாளர் ச.அற்புதராஜ் தலைமையில் புள்ளிலைன் ஊராட்சியில் ராஜேஸ்வரி எத்திராஜ், அருணகிரி, மனோகரன், வடகரை விஜி, பிரேமலதா, கே.மாதவன், ராஜேந்திரன், பத்மநாபன், சாக்ரடீஸ், 7 இ பாஸ்கர், மூர்த்தி ஆகியோர் முன்னிலையில் புள்ளிலைன் ஊராட்சி புதுநகர், பாலாஜி கார்டன் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள வாக்காளர்களிடம் உதயசூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரித்தனர். அப்போது வேட்பாளருக்கு பட்டாசு வெடித்து பொன்னாடை போர்த்தி மலர்மாலை அணிவித்தும், ஆரத்தி எடுத்தும் பிரம்மாண்டமாக வரவேற்பு அளித்தனர். இதில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.



■ சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருள்மிகு ஆனந்த வல்லி அம்மன் கோயில் அருகே வைகையாற்றுக்கு செல்லும் வழியில், பசுமை செயல் குழு சார்பில் கொளுத்தும் வெயிலால் அவதிப்படும் பொதுமக்களின் உடல் சூட்டை தணிக்கும் வகையில் மோர் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.இந்த நிகழ்ச்சியில், வழியாக சென்ற ஏராளமான ஆட்டோ ஓட்டுநர்கள் மற்றும் பொதுமக்கள் மோர் பருகி பயனடைந்தனர். வெயிலின் தாக்கம் அதிகரித்து வரும் நிலையில், பொதுமக்களுக்கு இதுபோன்ற தண்ணீர் மற்றும் மோர் வழங்கும் பணிகள் பாராட்டுக்குறியதாக உள்ளதாக மக்கள் தெரிவித்தனர்..

# ஸ்ரீ சைத்தன்யா டெக்னோ பள்ளி மாநில அளவில் நடைபெற்ற சி.பி.எஸ்.இ தேர்வு முடிவில் மீண்டும் முதலிடம் பிடித்துள்ளது

## தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு விருதுகள், சான்றிதழ் வழங்கி பாராட்டினர் ஸ்ரீ சைத்தன்யா பள்ளிகளின் இயக்குநர்களான சீமா, நாகேந்திரா

பல்லாவரம் ஏப். 18-
செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரம் ரேடியல் சாலையில் உள்ள ஸ்ரீ சைத்தன்யா டெக்னோ பள்ளியில் மாநில அளவில் நடைபெற்ற சி.பி.எஸ்.இ. தேர்வில் மீண்டும் முதலிடம் மற்றும் இரண்டாம் இடம் பிடித்த சைத்தன்யா பள்ளி மாணவ, மாணவிகள் 90 சதவீத அதிக மதிப்பெண்கள் பெற்றுள்ளதற்கு விருது வழங்கி பாராட்டு விழா நடைபெற்றது. சி.பி.எஸ் இ. தேர்வில் மாநில அளவில் 498 மதிப்பெண்கள் பெற்று 2 மாணவர்களும், 497 பெற்று 2 மாணவர்களும், 496 மதிப்பெண்கள் பெற்று 6 மாணவர்கள்,




495 மதிப்பெண்கள் பெற்று 6 மாணவர்கள் பெற்றுள்ளனர் மேலும் 95 மாணவர்கள் 490 அதிகமான மதிபெண்கள் பெற்றும், 340 மாணவர்கள் 480க்கும் அதிகமான மதிப்பெண்களை பெற்று சராசரியாக 420 மதிப்பெண்கள் பெற்று தமிழகத்தில் உள்ள ஸ்ரீ சைத்தன்யா 100 சதவீத தேர்ச்சி பெற்று 1600 மாணவர்கள் 90 சதவீத மதிப்பெண்களை பெற்றுள்ளனர், இவர்களை ஊக்குவித்து விருது வழங்கும் விழாவில் சிறப்பு விருந்தினர்களாக ஸ்ரீ சைத்தன்யா பள்ளிகளின் இயக்குநர்கள் சீமா, நாகேந்திரா கலந்து கொண்டு மாணவர்களின் திறமை மற்றும் ஆசிரியர்களின் சிறந்த பயிற்சி பெற்றோர்களின் ஊக்குவிப்பு இதற்கு காரணம் எனவும் மாணவர்கள் ஒரு இமாலய சாதனை படைத்துள்ளனர் என தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில் ஸ்ரீ சைத்தன்யா பள்ளிகளின் முதல்வர்கள், பள்ளி மாணவ, மாணவிகளின் பெற்றோர்கள், ஆசிரிய பெருமக்கள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



■ தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு, திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் வட்டம், சின்னாளபட்டி பூஞ்சோலையில் நடைபெற்ற மனித சங்கிலி விழிப்புணர்வு நிகழ்ச்சியில் இன்று மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் சரவணன் தேர்தல் விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய துண்டு பிரசுரங்களை பொதுமக்களுக்கு வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தினார். அருகில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் திட்ட இயக்குநர் சா.சதீஸ்பாபு மாவட்ட திட்ட அலுவலர் (ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டம்) .பூங்கொடி , தனி வட்டாட்சியர் (கேபிள் டி.வி) மங்கள பாண்டியன் ஆகியோர் உட்பட பலர் உள்ளனர்.



# ஆற்காடு தொகுதி திமுக வேட்பாளர் கணியம்பாடி ஒன்றியத்தில் வாக்கு சேகரிப்பு!

ஆற்காடு ஏப்_18-
ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் போட்டியிடும் வேட்பாளர் ஜெ.எல். ஈஸ்வரப்பன் கணியம்பாடி ஒன்றியம் சலமநத்தம், கம்மவான்பேட்டை, மோத்தக்கல், கம்மசமுத்திரம், மோட்டுபாளையம், கீழ்பள்ளிப்பட்டு, வல்லம், கத்தாழம்பட்டு, நஞ்சுக்கொண்டாபுரம்,பாலாத்துவண்ணன், வேப்பம்பட்டு, கணியம்பாடி, நெல்வாய், சாத்துமதுரை, மூஞ்சூர்பட்டு, அடுக்கம்பாறை, துத்திப்பட்டு போன்ற பல்வேறு பகுதிகளில் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.திமுக அரசின் சாதனைகளை விலக்கி பொதுமக்களிடையே வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். உடன் திமுக மாவட்ட அவைத்தலைவர் ஏ கே சுந்தரமூர்த்தி, கணியம்பாடி ஊராட்சி ஒன்றிய செயலாளர் சீனிவாசன் மாவட்ட கவுன்சிலர் கமல் மற்றும் விடுதலை சிறுத்தை மாவட்ட செயலாளர் பகலவன் பாபு,காங்கிரஸ், கம்யூனிஸ்ட் கட்சி முன்னணி பொறுப்பாளர்கள் தொண்டர்கள் பலர் கலந்து கொண்டனர்.



# உக்ரைன் குடியிருப்பு பகுதிகள் மீது 700 ட்ரோன்கள், ஏவுகணைகளை வீசி ரஷ்யா நடத்திய பயங்கர தாக்குதல்

## 16 பேர் உயிரிழப்பு

கீவ், ஏப்.18-
உக்ரைன் தலைநகர் கீவ் பகுதியில் குடியிருப்புகள் மீது ரஷ்யா நேற்று முன்தினம் 700 ட்ரோன்கள் மற்றும் ஏவுகணைகள் மூலம் பல மணி நேரம் தாக்குதல் நடத்தியது. இதில் 16 பேர் உயிரிழந்தனர், 80 பேர் காயம் அடைந்தனர்.

கடந்த சில வாரங்களாக உக்ரைன் மீது மிகப் பெரியளவிலான தாக்குதலை ரஷ்யா நடத்தவில்லை. தற்போது உக்ரைன் மீது மீண்டும் மிகப் பெரியளவிலான தாக்குதலை ரஷ்யா நேற்று முன்தினம் நடத்தியது. உக்ரைன் தலைவர் கீவ் பகுதியில் உள்ள அடுக்கு மாடி குடியிருப்புகளை நோக்கி 700 ட்ரோன்கள் மற்றும் ஏராளமான ஏவுகணைகளை ரஷ்யா பல மணி நேரம் வீசியது.

காலை முதல் இரவு வரை நடைபெற்ற தொடர் தாக்குதலில் 16 பேர் உயிரிழந்தனர், 80 பேர் காயம் அடைந்தனர். நான்கு ஆண்டுகளுக்கு மேலாக ரஷ்யா நடத்தி வரும் தாக்குதலில் உக்ரைன் மக்கள் 15,000 பேர் உயிரிழந்துள்ளதாக ஐ.நா தெரிவித்துள்ளது. வான் பாதுகாப்பு ஆயுதங்களை அதிகளவில் வழங்கக் கோரி ஜெர்மனி மற்றும் நார்வே நாடுகளுக்கு உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி 2 நாள் பயணம் மேற்கொண்டுள்ளார்.

இந்நிலையில் ரஷ்யா இந்த மிகப் பெரிய தாக்குதலை நடத்தியுள்ளது. உக்ரைன் உள்நாட்டில் ட்ரோன்கள் மற்றும் ஏவுகணைகளை உருவாக்கி வருகிறது. ஆனால், அவை அமெரிக்காவின் பேட்ரியாட் ஏவுகணைகளுக்கு நிகராக இல்லை. ஆயுத பற்றாக்குறை மட்டும் அல்லாமல் போர் காரணமாக நிதி நெருக்கடியிலும் உக்ரைன் சிக்கியுள்ளது.

ஐரோப்பிய யூனியன் 90 பில்லியன் யூரோ கடன் அளிப்பதாக உறுதி அளித்திருந்தது. ஆனால் ஹங்கேரி எதிர்ப்பால் இந்தக் கடன் நிலுவையில் உள்ளது. இதை விரைவில் வழங்கும்படி உக்ரைன் கோரிக்கை விடுத்துள்ளது.

ஈரான் போர் காரணமாக அமெரிக்க ஆயுதங்களின் கையிருப்பு குறைந்து வருவதும், உக்ரைனுக்கு அமெரிக்க ஆயுதங்கள் கிடைப்பதில் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது. ஆயுத உதவி அளிப்பதாக உறுதி அளித்த பல நட்பு நாடுகள் கைவிரித்து விட்டதாக அதிபர் ஜெலன்ஸ்கி கூறியுள்ளார்.

# எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்திதமிழகத்தை நாட்டிலேயே முதலிடம் கொண்டு வந்தது தி.மு.க.அரசுபர்கூர் தொகுதி வேட்பாளர் மதியழகன் எம்.எல்.ஏ. பிரசாரம்

கிருஷ்ணகிரி, ஏப்.18-
பர்கூர் தொகுதி தி.மு.க.வேட் பாளர் டி.மதியழகன் எம்.எல்.ஏ. வரட்டனப்பள்ளி, கூரம்பட்டி, போச்சம்பள்ளி மற்றும் சுற்று வட்டார பகுதி களில் உள்ள கிராமங்களில் வாக்கு சேகரித்தார். அப் போது பொதுமக்கள் மத்தி யில் அவர் பேசியதாவது:

தமிழகத்திற்கு அ.தி.மு.க. அரசு பல்வேறு நலத்திட்டங் களை கொண்டு வந்துள்ள தாக அந்த கட்சியினர் கூறு வது வேடிக்கையாகஉள்ளது. கடந்த 5 ஆண்டு தி.மு.க., அரசின் திட்டங்கள், நம் மாநி லம் தாண்டி, பல மாநிலங்களில் நடைமுறைபடுத்தப் பட்டு





வருகிறது. சொன்னதை சொன்னபடி செய்து காட்டி தமிழகத்தை நாட்டிலேயே முதலிடத்திற்கு கொண்டு வந் தது தி.முக. அரசு.

தமிழகத்தை வஞ்சிக்க நினைக்கும் பா.ஜனதாவுக்கு என்றும் இங்கு இடமில்லை என்பதை மக்கள் இந்த தேர்த லில் அளிக்கும் ஓட்டுகள். மூலம் நிரூபிக்க வேண்டும். அரசியல் நிபுணர்களை வைத்து மக்களுக்கு எதை செய்ய முடியும் என்ற நம்பிக் கையோடு தி.மு.க. தேர்தல் அறிக்கைவெளியிட்டுள்ளது. அ.தி.மு.க.வோ தங்கள்இஷ்டத்திற்கு வாக்குறுதி களை கொடுத்துள்ளது. இதை பார்த்த நடிகர் ஒருவர் தான் ஆட்சிக்கு வந்தால் செய்வ தாக கூறி, அவர் வாய்க்கு வந்ததெல்லாம் வாக்குறுதிக ளாக அளிக்கிறார். இவற்றை மக்கள் நம்ப மாட்டார்கள். மகளிர் உரிமைத்தொகை 1,000 ரூபாய் என முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்த போது, அதை கொடுக்கமுடி யாது என எதிர்த்தஎடப்பாடி பழனிசாமி பின்னர், 1,500 ரூபாய் தருகிறோம் எனக்கூறி யும் அவர்களை மக்கள் நம் பாமல், தி.மு.க.விற்கு ஓட்ட ளித்தனர். அதற்கு காரணம், சொன்னதை செய்யும் கட்சி, தி.மு.க. என்ற நம்பிக்கையில் தான். அதேபோல தற்போது அறிவிக்கப்பட்டுள்ள வாக்கு றுதிகள் அனைத்தும், திரா விட மாடல் 2.0 ஆட்சியில் நிறைவேற்றப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

மாலை தந்தி

சனிக்கிழமை 18.04.2026

# பொதுத்தேர்வு விடைத்தாள் மதிப்பீட்டுப் பணியில் ஊதிய வேறுபாடுகளை நீக்க வேண்டும்

## தமிழ்நாடு தமிழாசிரியர் சங்கம் கோரிக்கை

.சிவகங்கை, ஏப்.18-

பொதுத்தேர்வு விடைத்தாள் மதிப்பீட்டு பணியில் ஊதியம் வழங்குவதில் உள்ள வேறுபாடுகளை நீக்க வேண்டும் என தமிழ்நாடு பள்ளிக் கல்வித் தேர்வுத்துறைக்கு தமிழ்நாடு தமிழாசிரியர் சங்க மாநிலப் பொதுச் செயலர் நீ. இளங்கோ கோரிக்கை விடுத்துள்ளார். தமிழகத்தில் பிளஸ் 2 பொதுத்தேர்வு விடைத்தாள் மதிப்பீட்டுப் பணியும் பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வு விடைத்தாள் மதிப்பீட்டுப் பணியும் நடைபெற்று வருகின்றது. பிளஸ் 2 விடைத்தாள் மதிப்பீட்டுப் பணியில் ஒரு ஆசிரியருக்கு ஒரு நாளைக்கு 24 விடைத்தாள் மதிப்பீடு செய்ய வழங்கப்பட்டு வருகிறது. ஆனால், பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வு விடைத்தாள் மதிப்பீட்டுப் பணியில் ஒரு ஆசிரியருக்கு ஒரு நாளைக்கு 30 விடைத்தாள் மதிப்பீடு செய்ய வழங்கப்படுகிறது.பிளஸ் 2 பொதுத்தேர்வுகளில் அறிவியல் பாடங்களுக்கு 70 மதிப்பெண்களுக்கும், தமிழ் மொழிப் பாடம் உள்பட அனைத்து பாடங்களுக்கும் 90 மதிப்பெண்களுக்கு மட்டுமே விடைத்தாள் மதிப்பீடு செய்யப்படுகிறது. மீதி 10 மதிப்பெண்கள் அந்தந்த பாடங்களின் அகத் தேர்வு மூலம் அகமதிப்பெண் ஏற்கனவே வழங்கப்பட்டு விட்டது. ஆனால், பத்தாம் வகுப்பில் தமிழ் , ஆங்கிலம், கணிதம் ,சமூக அறிவியல் போன்ற பாடங்கள் 100 மதிப்பெண்களுக்கு மதிப்பீடு செய்யப்படுகிறது. அறிவியல் பாடம் மட்டும் 75 மதிப்பெண்களுக்கு மதிப்பீடு செய்யப்படுகிறது.

பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வில் ஒரு விடைத்தாள் மதிப்பீடு செய்வதற்கு 8 ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது. ஆனால், பிளஸ் 2 வில் ஒரு விடைத்தாள் மதிப்பீடு செய்வதற்கு 10 ரூபாய் வழங்கப்படுகிறது.

ஒரே விதமான மதிப்பீட்டுப் பணியில் ஈடுபடும் ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்குவதில் வேறுபாடு நிலை உள்ளன. இந்த வேறுபாடு நிலையை நீக்க பள்ளிக் கல்வித் தேர்வுத் துறை முன்வரவேண்டும். பத்தாம் வகுப்பில் விடைத்தாள் எண்ணிக்கையை குறைத்தும் மதிப்பு ஊதியத்தை உயர்த்தியும் வழங்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளார்.




■ சிவகங்கை மாவட்டம் மானாமதுரை தேவர் சிலை அருகே வெயிலின் தாக்கம் அதிகரித்துள்ள நிலையில், போக்குவரத்து பணியில் ஈடுபட்டிருந்த காவலர்களுக்கு உடல் சோர்வை தணிக்கும் வகையில் ஜூஸ் வழங்கப்பட்டது.சிறப்பு சார்பு ஆய்வாளர் ஜெயமாரி அவர்களின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில், போக்குவரத்து காவலர்கள் அனைவருக்கும் ஜூஸ் வழங்கப்பட்டு வெயிலால் ஏற்படும் உடல் சோர்வு குறைக்கப்பட்டது.இந்த மனிதநேய முயற்சிக்கு காவல்துறையினரும் பொதுமக்களும் பாராட்டு தெரிவித்தனர்.



■ தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் ரு 2026 நடைபெற உள்ளதை முன்னிட்டுவருகின்ற 18.04.2026 மற்றும் 19.04.2026 ஆகிய தேதிகளில் வெளி மாவட்ட சட்டமன்ற தொகுதியில் வாக்காளர்களாக இருந்து மதுரை மாவட்டத்தில் பணிபுரியும் காவல் துறை அலுவலர்கள் மற்றும் தேர்தல் பணியில் ஈடுபட்டுள்ள இதர துறை அலுவலர்கள் தங்களது அஞ்சல் வாக்கினை பதிவு செய்ய மதுரை அவுட்போஸ்ட் அருகில் உள்ள காமராஜ் பல்கலை கழக கல்லூரியில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னேற்பாடு மற்றும் பாதுகாப்பு பணிகள் குறித்து மதுரை மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார்,இ.ஆ.ப., ஆய்வு செய்து பார்வையிட்டார்.

Format C-1

(for candidate to publish in Newspapers, TV )

Declaration about criminal cases

(As per the judgement dated 25th September, 2018, of Hon'ble Supreme Court in WP (Civil) No. 536 of 2011 (Public Interest foundation &Ors. Vs Union of India &Anr.)

Name and address of candidate: M.காளீஸ்வரன்
S/oமுத்தையா
கதவு எண்..1421, அண்ணா நகர்
பனங்காடி ரோடு, சிவகங்கை தாலுகா
சிவகங்கை மாவட்டம்-630 561

Name of Political party : சுயேட்சை

Name of Election : General Election to Tamil Nadu Legislative Assembly -2026

Name of Constituency : 186 – சிவகங்கை

I, M.KALEESWARAN, a candidate for the abovementioned election, declare for public information the following details about my criminal antecedents:

(A) Pending criminal Cases

| Sl.no. | Name of Court | Case No. and dated | Status of Case(s) | Section(s) of the Acts Concerned and Brief Description of Offence(s) |
|---|---|---|---|---|
| 1 | சிவகங்கை கூடுதல் மாவட்ட நீதிமன்றம் | SC 47/2026 மாற்றம் CBCID குற்ற எண்.1/2014 | Pending | U/S 147,148, 294(b), 302, 120(b) |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

(B)Details about cases of conviction for criminal offences

| Sl.No | Name of Court & date(s) of order(s) | Description of offence(s) & punishment imposed | Maximum Punishment Imposed |
|---|---|---|---|
| 1 | இல்லை | இல்லை | இல்லை |
| 2 | இல்லை | இல்லை | இல்லை |
| 3 | இல்லை | இல்லை | இல்லை |

# "எதிரணி கோட்டைக்குள் எண்ட்ரி கிருத்திகா 'மாஸ்' ஷோ!"

## "செல்லப்பா சொந்த ஊரில் தி.மு.க. களம் குலுக்கிய அதிரடி!"சாக்கிலிபட்டியில் பட்டாசு வெடித்து உற்சாக வரவேற்பு – தேர்தல் களத்தில் பரபரப்பு

மதுரை, ஏப்.18-

தமிழகத்தில் சட்டமன்ற தேர்தல் வாக்குப்பதிவு நெருங்கிக் கொண்டிருக்கும் நிலையில், அரசியல் கட்சிகளின் பரப்புரை தீவிர கட்டத்தை எட்டியுள்ளது. மதுரை திருப்பரங்குன்றம் சட்டமன்ற தொகுதியில் தி.மு.க. வேட்பாளரும், தொகுதியின் முதல் பெண் வேட்பாளருமான கிருத்திகா தங்கப்பாண்டி தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டு வருகிறார். நல்லூர், சோளங்குருணி, நெடுமதுரை, எலியார்பத்தி, சாக்கிலிபட்டி, தென்பழஞ்சி, வடபழஞ்சி உள்ளிட்ட



பகுதிகளில் அவர் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். குறிப்பாக, அ.தி.மு.க. வேட்பாளரும், sitting MLA-வுமான ராஜன் செல்லப்பாவின் சொந்த ஊரான சாக்கிலிபட்டியில் கிருத்திகா தங்கப்பாண்டி பிரசாரம் செய்தது அரசியல் வட்டாரங்களில் கவனம் ஈர்த்தது.அங்கு வந்த அவருக்கு பெண்கள் மற்றும் தி.மு.க. தொண்டர்கள் பட்டாசுகள் வெடித்து, மாலை அணிவித்து, மலர்களை தூவி உற்சாக வரவேற்பளித்தனர். இளம்பெண்கள் பலர் ரோஜாப்பூக்கள் வழங்கி வரவேற்றது நிகழ்வுக்கு மேலும் வண்ணம் சேர்த்தது. அப்போது பேசிய கிருத்திகா தங்கப்பாண்டி,"எனக்கு வாக்களித்து வெற்றி பெறச் செய்தால், திருப்பரங்குன்றம் தொகுதியை முன்மாதிரி தொகுதியாக மாற்றுவேன். வேலையில்லா இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்க பல்வேறு முகாம்கள் நடத்தப்படும். அடிப்படை வசதிகளை மேம்படுத்த அயராது உழைப்பேன். உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து எனக்கு ஆதரவு அளிக்க வேண்டும்," எனக் கேட்டுக்கொண்டார்.

அ.தி.மு.க. வேட்பாளரின் சொந்த ஊரிலேயே தி.மு.க. வேட்பாளருக்கு கிடைத்த இந்த உற்சாக வரவேற்பு, திருப்பரங்குன்றம் தேர்தல் களத்தில் பேசுபொருளாக மாறியுள்ளது.

# வாக்குப்பதிவு இயந்திரங்களில் 4,023 வேட்பாளர்களின் பெயர், சின்னம் பொருத்தும் பணி தொடக்கம்

சென்னை: ஏப்.18-

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் பயன்படுத்தப்பட உள்ள வாக்குப்பதிவு இயந்திரங்களில் 4,023 வேட்பாளர்களின் பெயர், வண்ண புகைப்படம் மற்றும் சின்னங்களை பொருத்தும் பணி நேற்று தொடங்கியது. தமிழகத்தில் உள்ள 234 தொகுதிகளில் வேட்பு மனு ஏற்கப்பட்ட 4,023 வேட்பாளர்கள் தற்போது களத்தில் தீவிர பிரச்சாரம் செய்து வருகின்றனர். இத்தேர்தலில் தமிழகத்தில் உள்ள 75 ஆயிரத்து 64 வாக்குச்சாவடிகளில் 5.73 கோடி பேர் வாக்களிக்க உள்ளனர். இந்த வாக்குச்சாவடிகளுக்கு தேவையான சுமார் 75 ஆயிரம் கட்டுப்பாட்டு இயந்திரங்கள், விவிபாட் இயந்திரங்கள் மற்றும் 1 லட்சத்துக்கும் மேற்பட்ட வாக்குப்பதிவு இயந்திரங்கள் பயன்படுத்தப்பட உள்ளன.

இந்த இயந்திரங்கள் ஏற்கெனவே அந்தந்த தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் அலுவலகங்களுக்கு



அனுப்பி வைக்கப்பட்டன.

இந்த வாக்குப்பதிவு இயந்திரங்களில் வேட்பாளர்களின் பெயர், வண்ண புகைப்படம், சின்னம், ஆகியவற்றை பொருத்தும் பணி அந்தந்த தேர்தல் நடத்தும் அலுவலர்கள் தலைமையில், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் முன்னிலையில் நேற்று தொடங்கியது.

சென்னையில் இப்பணிகளை மாவட்ட தேர்தல் அதிகாரி ஜெ.குமரகுருபரன் நேரில் ஆய்வு செய்தார். இந்த மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள், பின்னர் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் முன்னிலையில் அந்தந்த தொகுதி பாதுகாப்பு அறைகளில் வைக்கப் பட்டன.தேர்தலையொட்டி, நகர்ப்புறங்களில் வசிக்கும் வாக்காளர்கள், தங்கள் சொந்த ஊர்களுக்கு சென்று வாக்களிக்க ஏதுவாக, ஏப்.21 முதல் 23ம் தேதி வரை 5,574 சிறப்பு பேருந்துகள் உள்பட 10,663 பேருந்துகள் இயக்க அரசு போக்குவரத்து கழகங்கள் ஏற்பாடு செய்துள்ளன.

தேர்தலை அமைதியாக நடத்த, தமிழகம் முழுவதும் ஏப்.21, 22, 23 மற்றும் வாக்கு எண்ணிக்கை நடைபெறும் மே 4ம் தேதி ஆகிய 4 நாட்கள் டாஸ்மாக் கடைகளை மூட உத்தரவிடப்பட்டுள்ளது.

# சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி மதுக்கடைகள், பார்கள் 4 நாட்கள் மூடல்

சென்னை, ஏப்.18-

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி ஏப் .21, 22, 23 மற்றும் மே 4 ஆகிய 4 நாட்கள் மாநிலம் முழுவதும் உள்ள மதுக்கடைகள், பார்கள் மூடப்படும் என்று அனைத்து மாவட்ட தேர்தல் அதிகாரிகள் உத்தர விட்டுள்ளனர்.தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் வரும் 23ம் தேதி நடைபெறுகிறது. தேர்தல் நாளான ஏப்.23ம் தேதி, வாக்குப்பதிவு நிறைவடையும் அன்று மாலை 6 மணிக்கு முந்தைய 48 மணி நேரத்தை அமைதி நேர மாக தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.இதனால் மாநிலத்தில் அமைதியை கடைபிடிக்கும் நோக்கில் மதுக் கடைகளை மூட தேர்தல் ஆணையம் அறிவுறுத்தி இருந் தது. அதன்படி தமிழகம் முழுவதும் உள்ள அனைத்து மாவட்ட தேர்தல் அலுவலர்களும், மதுக்கடைகளை மூடுவது தொடர்பாக செய்திக்குறிப்புகளை வெளியிட் டுள்ளனர்.அதன் விவரம்: தமிழக சட்டப்பேரவைத் தேர் தலை முன்னிட்டு அனைத்து மாவட்டங்களிலும், தேர் தல் சுதந்திரமாகவும், நியாயமாகவும், அமைதியாக வும், சுமுகமாகவும் நடைபெறுவதை உறுதி செய்யும் நோக்கில், தமிழ்நாடு மதுபான சில்லறை விற்பனை (கடைகள் மற்றும் பார்கள்) விதிகள் 2003, விதி 12(2) படி உரிமம் பெற்று இயங்கி வரும் இந்திய தயாரிப்பு அயல்நாட்டு மதுபானம் (IMFL) சில்லறை விற்பனை கடைகள், அவற்றுடன் இணைந்த பார்கள் உள்ளிட்ட அனைத்தும் ஏப். 21ம் தேதி காலை 10 மணிமுதல், வாக்குப்பதிவு நாளான 23ம் தேதி நள்ளிரவு 12 மணி வரையும், வாக்கு எண்ணிக்கை நாளான மே 4ம் தேதி என 4 நாட்களுக்கு மூடப்பட்டிருக்கும்.

மேற்குறிப்பிட்ட நாட்களில் மதுபானங்கள் விற் பனை செய்யப்பட மாட்டாது. அன்றைய தினங்களில் விதிகளுக்கு மாறாக மது விற்பனை ஏதும் செய்யப்பட் டால் கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இவ்வாறு செய்திக்குறிப்புகளில்கூறப்பட்டுள்ளது.

# தேனி மாவட்டம் மங்கலதேவி கண்ணகி கோயில் விழா முன்னேற்பாடு பணிகள் குறித்த ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் தேனி மற்றும் இடுக்கி மாவட்ட ஆட்சித்தலைவர்கள் தலைமையில் நடைபெற்றது

தேனி. ஏப். 18-

தேனி மாவட்டம், தமிழகேரள எல்லையில் அமைந்துள்ள மங்கலதேவி கண்ணகி கோயில் சித்திரை முழு நிலவு விழா (01.05.2026) அன்று நடைபெறவுள்ளதை முன்னிட்டு, தேக்கடியில் உள்ள பெரியார் புலிகள் காப்பக மூங்கில் காடு அரங்கத்தில், முன்னேற்பாடு பணிகள் குறித்த ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ் ஜீத்சிங், மற்றும் இடுக்கி மாவட்ட ஆட்சித்தலைவர் .தினேஷன் சேருவாட், ஆகியோர் தலைமையில் இடுக்கி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் .சாபூ மத்யூ சார் ஆட்சியர் .அனுப்கார்க், ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.மங்கலதேவி கண்ணகி கோயில் சித்திரை முழு நிலவு விழா ஆண்டுதோறும் சித்ரா பௌர்ணமி தினத்தன்று தமிழகேரள மக்களால் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது, இவ்வாண்டு 01.05.2026 அன்று நடைபெற உள்ளதையொட்டி, திருவிழாவில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு வழிபாடு செய்ய இருப்பதால் தமிழக மற்றும் கேரள பக்தர்கள் குமுளியில் இருந்து கோவிலுக்கு செல்லுவதற்கு ஏதுவாக





போக்குவரத்து வசதி, சுகாதாரம்,குடிநீர், தற்காலிக பந்தல்கள் மற்றும்கழிப்பிட வசதி, பாதைகள் செப்பனிடுதல் போன்ற பணிகள் மேற்கொள்வது குறித்து ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டது.

மேலும், கோயிலுக்கு வருகை தருகின்ற பக்தர்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்குவது, தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்துவது குறித்து, சுகாதாரத்துறை மற்றும் தீயணைப்புத்துறை, வனத்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளின் அலுவலர்களுடன் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து எடுத்துரைக்கப்பட்டது. பசுமை சோதனை சாவடிகள் அமைத்து, பக்தர்கள் தடைசெய்யப்பட்ட பிளாஸ்டி பொருட்களை கொண்டு செல்ல அனுமதிக்கக் கூடாது. வனப்பகுதியில் எளிதில் தீப்பற்றக் கூடிய பொருட்கள் பயன்படுத்துவதை தவிர்க்க உரிய இடங்களில் விழிப்புணர்வு பதாகைகளை வைத்தல் வேண்டும். மேலும், கோடைகால வெப்பத்தின் தாக்கம் அதிகமாக இருப்பதால் கூடுதலாக குடிநீர், உணவு, கழிவறை உள்ளிட்ட அனைத்து அடிப்படை வசதிகளும் செய்துதர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பக்தர்களின் பாதுகாப்பிற்காக போதிய அளவில் காவலர்களை சுழற்சி முறையில் நியமனம் செய்யப்பட உள்ளார்கள். கடந்த ாண்டைப்போன்று இந்தாண்டும், பக்தர்கள் பாதுகாப்புடன் எவ்வித சிரமமின்றி மங்கலதேவி கண்ணகி கோயிலில் வழிபாடு செய்து திரும்பும் பொருட்டு தேவையான போக்குவரத்து வசதி ஏற்பாடு செய்யப்பட உள்ளது. மேலும் கோயிலுக்கு செல்லும் வாகனங்களுக்கு அனுமதிச்சீட்டு வழங்கும் வகையில், வாகன தரச்சான்றிழ் (Vehicle Stability Certificate) வழங்கப்படவுள்ளது. மேலும், பளியன்குடி வழியாக வருகை தரும் பக்தர்களுக்கு தேவையான கூடுதல் மருத்துவ முகாம்கள், பாதுகாப்பு வசதிகள் ஏற்படுத்திடவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளது. பக்தர்களின் வசதிக்காக ஆங்காங்கே வழிகாட்டி பலகை வைக்கப்பட உள்ளளது. அவசர நிகழ்வுகளுக்காக சுகாதாரத்துறையின் மூலம் மருத்துவ குழுவினருடன் ஆம்புலன்ஸ் வாகனங்கள் மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையின் மூலம் தீயணைப்பு வாகனங்கள் மற்றும் பயிற்சி பெற்ற மீட்பு குழுவினர் பணியமர்த்தப்பட உள்ளார்கள்.

கண்ணகி கோயில் சித்ராபௌர்ணமி திருவிழாவினை சிறப்பாக கொண்டாடிட பக்தர்கள் அனைவரும் இரு மாநில மாவட்ட நிர்வாகத்தின் வழிகாட்டுதலுக்கு முழு ஒத்துழைப்பினை வழங்கிட வேண்டும் என கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. இக்கூட்டத்தில், துணை இயக்குநர்கள்.விவேக் பரஸ்நாத் யாதவ் (ஸ்ரீவில்லிபுத்தூர் மேகமலை புலிகள் காப்பகம்), ஆர்.லட்சுமி (பெரியார் புலிகள் காப்பகம்), மாவட்ட வன அலுவ லர்.கிரண், மருத்துவம் மற்றும் ஊரகநலப்பணிகள் இணை இயக்குநர் மரு.கலைச்செல்வி, துணை இயக்குநர் மரு.வரதராஜன், செய்தி மக்கள் தொடர் அலுவலர் ஏ.எடிசன், வட்டார போக்குவரத்து அலுவலர் .மாணிக்கம் மற்றும் வருவாய்த்துறை, வனத்துறை, போக்குவரத்துத் துறை, சுகாதாரத்துறை உள்ளிட்ட இரு மாநில அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161